1975 மார்ச் 13]

(அ) தஞ்சாவூர் அரசினர் மகளிர் கல்லூரிக்கு மாணவர் விடுதிக் கட்டடம் ஒன்று புதிதாகக் கட்டுகின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் உத்தேசச் செலவு என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ரூ. 4.50 லட்சம்.

திரு கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் தொடங்க இருப்பதாகச் சொன்னார்கள், எப்போது தொடங்க இருக்கிறார்கள் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அளவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழக மானியக் குழு ஆதற்கு 3 லட்சம் தரும். அது மத்திய அரசிலிருந்து வந்தபிறகு அந்த வேலைகள் ஆரம்பிக்கப் படும்.

செல்லியம்மன் ஓடைத் திட்டம்.

*299 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், மணக்குடையான் ஊராட்சி, இருங்களாகுறிச்சி கிராமம் செல்லியம்மன் ஓடைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன?

(உ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : (அ) இத் திட்டத்திற்கான மதிப்பீடு ஸ்தலப் பொறியாளர்களின் பரிசீலனையில் உள்ளது.

(இ) ரூ. 2.05 லட்சம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை. ஏனெனில், இத்திட்டத்திற்கான மதிப்பீடு இன்னும் அரசின் பரிசீலனைக்கு வரவில்லை.

திரு. செ. சதாசிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியிலே ஆற்றுப்பாசனம் இல்லை என்று முன்பே குறிப்பிட்டிருந்தேன். இதை உடனடியாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மதிப்பீடு அரசுக்கு வந்தவுடன் அதைப்பற்றி ஆணை பிறப்பிக்கப்படும்.

[1975 மார்ச் 13

வெட்டாற்றின் குறுக்கே அணை.

*300 வினு—திரு. தாழை மு. கருணநிதி : மாண்புகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

நன்னிலம் தாலுகா, வெட்டாற்றின் குறுக்கே ஊர்குடி அருகில் (Bed-dam) ஒன்று கட்டி காவனூர் சூரனூர் போன்ற ஏழு கிராமங்களின் நீர்ப்பாசன வசதிகளைச் சீர்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத் திட்டத்திற்கான செயற்குறிப்பு ஸ்தல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

திரு. தாழை மு. கருணநிதி : இது இந்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படுமா? அதற்கு அமைச்சர் அவர்கள் உறுதியளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆய்வு வேலைகள் முடிவுற்றவுடன் மதிப்பீடு தயார் செய்யப்படும் அநேகமாக 1975-76-ல் இந்த வேலை நடைபெறும் என்று நம்புகிறேன்.

Chemical Industries.

*301 Q—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :

(*a*) whether it is a fact that the feasibility report has been submitted to Government on running Chemical Industries in Small Scale Sector by Messrs. M. M. Gurunath & Sons ;

(*b*) whether the report has been examined by the Government ; and

(*c*) whether a copy of the report will be placed on the table of the House'

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) and (இ) : ஆம்

(உ) உப்பு, ஜிப்சம், பிட்டர்ன்ஸ் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறுதொழில்கள் வளர்ச்சி குறித்து திருவாளர்கள் எம்.எம். குருநாதன் & சன்ஸ் தயாரித்த தொடக்க திட்ட அறிக்கையின் நகல்கள் சட்டமன்ற பேரவைத்துறை நூலகத்தில் உள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : சார், அவர்கள் சிபாரிசு செய்த முக்கியமான தொழில்கள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா

The Hon. Thiru S. J. SADIQ PASHA : The development si for the under-mentioned marine chemical industries.—